பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 24 செவ்வாய்க்கிழமை 07.06.2022 கதிர் 106

## மரக்கறி, மீன்களின் விலைகள் உயர்வு

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு மேலதிகமாக சந்தைகளில் தற்போது மரக்கறிகள் மற்றும் மீன்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

இதன்படி, பிரதான மீன் சந்தைகளில் ஒரு கிலோ கிராம் கெலவல்லா மீன் 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோகிராம் தலபத் மீன்

☞2

# எரிபொருள், எரிவாயுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும்



### நாம் விழுந்த இடத்திலிருந்து உயிர்த்தெழுதலை தொடங்க வேண்டும் என்கின்றார் பிரதமர் ரணில்

எரிபொருள் மற்றும் எரிவாயுவை முடிந்தளவுக்கு சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்வரும் மூன்று வாரங்களில் எரிபொருளுக்கும் எரிவாயுக்கும் நெருக்கடி நிலவும் சாத்தியம் காணப்படுகின்றது எனவும், இதனாலேயே இந்த வேண்டுகோளை விடுக்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட உரையாற்றும்போதே பிரதமர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

☞7

## அமைச்சர்கள் எவரும் சம்பளம் பெறமாட்டர்!

### ஒரு வருடத்துக்கு என்கிறார் பந்துல



ஒரு வருடத்துக்குச் சம்பளம் இன்றி பணியாற்றுவதற்கு அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

நேற்று ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன

☞2

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவராக உவைஸ் நியமனம்



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குப் புதிய தலைவராக உவைஸ் மொஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் தலைவராகப் பணியாற்றி வந்த சுமித் விஜேசிங்க, தனிப்பட்ட விடயம் காரணமாக தமது பதவி விலகல் கடிதத்தை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பி வைத்திருந்த நிலையில், குறித்த பதவி வெற்றிடத்திற்கு உவைஸ் மொஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து உவைஸ், தனது கடமைகளை இன்று முதல் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

☞2

## சீமெந்து விலை மீண்டும் உயர்வு





2 ஆயிரத்து 850 ரூபாவாக இருந்த சீமெந்து மூடை ஒன்றின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 50 கிலோ எடையுள்ள சீமெந்து மூடை ஒன்றின் விலையே இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் அனைத்து 50 கிலோகிராம் சீமெந்து மூடை ஒன்றின் புதிய விலை 3 ஆயிரம் ரூபா எனச் சீமெந்து நிறுவனங்கள் தெரிவிக்கின்றன

## இரட்டைக் கொலை!

### சந்தேகநபர்கள் அடையாளம்

அநுராதபுரம் மாவட்டம், எப்பாவல - எந்கல சந்தியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைதுசெய்ய பொலிஸ் சார்பில் சில குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

நேற்றிரவு வீட்டின் உரிமையாளரும் அவரது நண்பரும் மது அருந்திக் கொண்டிருந்த வேளையில்,

☞2

## கப்ராலுக்குப் பிணை

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை ஒரு கோடி ரூபா சரீர பிணையில் விடுதலை செய்ய கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

அரசுக்குச் சொந்தமான 65 இலட்சம் அமெரிக்க டொலர் நிதி குறித்து நம்பிக்கையைச்

☞2

## காணாமல்போயிருந்த யுவதிகள் கண்டுபிடிப்பு



அக்கரப்பத்தனையில் விறகு தேடச் சென்றிருந்த நிலையில்கடந்த6நாட்களாகக்காணாமல்போயிருந்த இரண்டு யுவதிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்

குறித்த இருவரும் கொழும்பில் இருக்கின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

☞2

## ரஞ்சனுக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட இரு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை



ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்டஇரண்டுவருடக்கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டாவது வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயர்நீதிமன்றத்தால் 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

☞2

## பலர் தொழிலை இழக்கும் அபாயம்

இலங்கையில் பணவீக்கம் கடுமையாக அதிகரித்து வரும் நிலையில், எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் தொழிலை இழக்கும் அபாயம் காணப்படுகின்றது எனப் பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தொழில் நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்குப் போதுமானளவு வருமானம் இல்லாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் படி, நாட்டின் பண வீக்கம் கடந்த மே மாதத்தில் 39 தசம் 1 வீதாமாக அதிகரித்துள்ளதி எனவும்

☞2

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




## மரக்கறி, மீன்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1,700 ரூபாவுக்கும், பலயா மீன் ஒரு கிலோ கிராம் 1,000 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோகிராம் சாலை மற்றும் லின்னா ஆகிய மீன்களின் மொத்த விற்பனை விலை 800 ரூபாவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## பெற்றோலியக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னர் இலங்கை பெற்றோலிய மொத்த களஞ்சிய முனையத்தின் தலைவராக பணியாற்றிய இவர், தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சர்கள் எவரும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமையைக் கருத்தில்கொண்டு, பிரதமரினால் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டது எனவும், இதற்கு அனைத்து அமைச்சர்களும் இணங்கினர் எனவும் பந்துல குணவர்தன மேலும் கூறினார்.

## இரட்டைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவ இடத்துக்கு வருகை தந்த சிலர் கூரிய ஆயுதங்களால் அவர்களைத் தாக்கினர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பலியானவர்கள் 46 மற்றும் 31 வயதுகளையுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரும் மது பாவனை பழக்கத்துக்கு அடிமையானவர்கள் எனவும் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

## காணாமல்போயிருந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் வீட்டில் இருந்து விறகு சேர்க்கச் சென்றவர்கள் மீண்டும் வீடு திரும்பாதமையால் அக்கரப்பத்தனைப் பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

காணாமல்போனவர்கள் அக்கரப்பத்தனை சென்மார்கட் தோட்டத்தில் வசிக்கும் 15 மற்றும் 18 வயதுகளையுடைய யுவதிகளாவர்.

இந்நிலையில், குறித்த இருவரும் கொழும்பில் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## கப்ராலுக்குப் பிணை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீர்குலைத்தமை தொடர்பான முறைப்பாட்டுக்கான விசாரணைக்காக அஜித் நிவாட் கப்ரால் மன்றில் ஆஜராகிய சந்தர்ப்பத்தில் இந்தப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

## ரஞ்சனுக்கு 5 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புவனேக அலுவிஹாரே, எல். டி. பி. தெஹிதெனிய மற்றும் காமினி அமரசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழுவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## பலர் தொழிலை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக நாட்டின் பல்வேறு துறைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் பொருளாதார நிபுணர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பிரசன்னாவின் சண்டப்பிரசண்டம்

**இலங்கையின் அரசியலும், அரசியல் தலைமைத்துவமும் எத்தகையோரின் கைகளில் சிக்கிச் சீரழிந்து கிடக்கின்றது என்பதற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு எதிராக நேற்று வழங்கப்பட்ட குற்றத் தீர்ப்பு நல்ல சான்று. உரைகல்.**

**மேல் மாகாண முதலமைச்சராக இருந்தவர், அந்தச் சமயத்தில் காணி ஒன்றுக்கு மண் நிரப்பி, அங்கிருக்கும் அத்துமீறல் குடியேற்றக்காரர்களை அகற்றித் தருவதற்கு ஒரு வர்த்தகரிடம் அச்சுறுத்தி 6 கோடி 40 லட்சம் ரூபா கப்பம் கேட்டமையும் –**

**அதற்காக அந்த வர்த்தகரைத் தருவித்து, அச்சுறுத்தி, மிரட்டி, காசோலைகளில் ஒப்பம் பெற்றமையும் – சிறிய விவகாரங்கள் அல்ல.**

**ஊழல், மோசடி, லஞ்சம், அடாவடித்தனம், அராஜகம், அரசியல் அட்டகாசம், குளறுபடி என்று பொது தார்மீகத்தின் கீழ் பல குற்றங்கள் இதற்குள் அடங்கும். நீதித்துறையின் சட்ட வியாக்கியானக் குற்றங்கள் வேறு வகையானவை. தண்டனைத் தீர்ப்புகளும் வித்தியாசமானவை. ஆனால் இத்தகைய மோசமான குற்றங்களுக்கு – நஷ்ட ஈடு, அபராதம், தண்டம் ஆகியவற்றுக்கு அப்பால் – ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனை மட்டும்தான் என்பதை சாதாரண அப்பாவி பொதுமக்களினால் புரிந்துகொள்ள முடியாது. தண்டனைத் தீர்ப்பை வழங்கிய நீதிவானுக்குத்தான் அது வெளிச்சம்.**

**அந்த விடயத்தில் யாரேனும் தலையிட்டு விசாரிப்பதோ, கேள்வி எழுப்புவதோ தண்டனைக்குரிய சட்ட விவகாரங்கள் என்பதனால் அவ்விவகாரத்தைத் தொடாமல் விட்டு விடுவோம். தெய்வம் பார்த்துக் கொள்ள வேண்டிய விடயம் என்று மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டியது தான்.**

**ஆனால் இப்படித் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறி போகாமல் இருக்கும் விதத்தில் தளர்வான – ஒத்தி வைக்கப்பட்ட – சிறைத்தண்டனைத் தீர்ப்பை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பெற்றுக்கொள்வதற்கு அவரின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் முன்வைத்த வாதம் கவனிக்கப்பட வேண்டியதாகும்.**

**“கடந்த 20ஆம் திகதிதான் அறுவை சிகிச்சை ஒன்றுக்கு அவர் உட்பட்டார். அண்மைய வன்செயல்களில் அவரின் உடகம்பொல வீடு முற்றாக எரிந்து நாசமாகி உள்ளது. அதனால் அவரின் மகளின் திருமணம் தாமதமாகி மகள் மன அழுத்தத்துக்கும் உள்ளாகியுள்ளார். இந்நிலையில் நீதிமன்றம் ஒன்று வழங்கிய உத்தரவினால் நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் வருகையும் வீழ்ச்சியுறும் பேராபத்து வந்துள்ளது. ( ஏரோபுளொட் விமானம் மீதான தடை உத்தரவைத்தான் இப்படி விவரித்துள்ளார் சட்டத்தரணி. ) இப்போது இவர் ஒரு சிரேஷ்ட அமைச்சர். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர். இவருக்கு எதிரான தீர்ப்புப் பாதகமாக அமையுமானால் இலங்கையில் ஸ்திரமான அரசு இல்லை என்ற எண்ணப்பங்கு வந்து நாட்டுக்கு கெடுதி ஏற்பட்டுவிடும். ஆகவே நாட்டின் நலன்கருதி இவருக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பை குறைத்து வழங்குங்கள்” – என்று மன்றாடி இருக்கின்றார் அவரின் சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா.**

**வெட்கம்! வெட்கம்! பெரும் அரசியல் அராஜகம் புரிந்த அரசியல்வாதிக்கு நாட்டின் நலன் கருதி தண்டனையைத் தளர்த்தும்படி நீதிமன்றத்தில் விண்ணப்பித்தமை இந்த அரசுக்கும், ஆட்சிப் பீடத்துக்கும் மட்டுமல்லாமல் நாட்டுக்கும் பேரவமானத்தைத் தரும் விடயமாகும்.**

**அரசியல் அட்டகாசத்தை நாட்டின் நலன் கருதி பொறுத்துக் கொள்ளும் நீதிமுறைமை இங்கு இருக்குமானால் அது சட்டத்தின் ஆட்சிக்கும் பேரிழுக்கு.**

# வடக்கு மக்கள் இந்திய முதலீடுகளால் ஏராளமான பலனை அனுபவிப்பார்கள்

## இந்திய துணைத் தூதர் நம்பிக்கை



இந்திய முதலீடுகளால் வட மாகாண மக்கள் பலனை அனுபவிப்பார்கள் என இந்தியத் துணைத்தூதுவர் ராகேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் அட்சய பாத்ரா உதவிகள் எனும் தொனிப்பொருளில் இந்திய மக்களின் நிவாரணப் பொருள்களை வழங்கி வைக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

வட மாகாணத்தில் இரண்டு லட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் நிவாரணம் கையளிக்கப்பட்டுள்ளது. இது முதற்கட்டமான உதவியே. தமிழ்நாட்டில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் இன்னும் நிவாரணப் பொதிகள் வந்துகொண்டிருக்கின்றன.

அரிசி மற்றும் பால்மா இதன்போது கையளித்துள்ளோம். யாழ்ப்பாணம் தீவுப்பகுதியில் உள்ள மீனவர்களுக்கு 17 ஆயிரம் லீற்றர் மண்ணெண்னெய் வழங்கி வைத்திருந்தோம். யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குத் தேவையான மருந்துப் பொருள்கள், மருத்துவ உபகரணங்களும் வழங்கி வைத்திருந்தோம். இன்னும் மருந்துகளும் மருத்துவ உபகரணங்களும் வந்துகொண்டிருக்கின்றன.

இந்த நெருக்கடியில் இருந்து வெளியில் வருவதற்கு முன்னேக்கி பார்க்க வேண்டியிருக்கின்றது. இந்தியாவில் இருந்து முதலீடு மற்றும் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்களை கொண்டு வரவும் நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். மிக விரைவில் இதற்கான பலனை வட மாகாணத்தில் காண்போம்.

அத்துடன் தனிப்பட்ட முறையில் சில மீனவர் சங்கத்தில் இருந்து மண்ணெண்னெய் கோரி கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளனர். அதனை உத்தியோகபூர்வமாக அரசாங்க அதிபரூடாக அல்லது வட மாகாண செயலாளர் ஊடாக தொகுத்து எடுத்து வருமாறு கோரியுள்ளோம். அவ்வாறு வந்தால் பரிசீலனை செய்யலாம்.

இதேவேளை இந்திய இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பியபோது,

கடந்த ஒன்றரை மாதங்களாக இந்திய மீனவர்களுக்கு மீன் பிடிக்கத் தடை இருக்கின்றது. இந்தியாவில் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கும் உபகரணங்கள் மற்றும் கப்பல்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதே வேளை பேச்சும் பல மட்டங்களில் இடம்பெற்று வருகின்றது. அரசியல் ரீதியிலும் இடம்பெற்று வருகின்றது.

கச்சதீவை மீட்பதென்பது உத்தியோகபூர்மாக வரும் விடயம் அல்ல. அவை எல்லாம் பத்திரிகையில் வரும் விடயங்களாகவே இருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

# பொலிஸ் வாகனங்களுக்கான எரிபொருள் அளவை 20 வீதத்தால் குறைக்க ஏற்பாடு!

கொழும்பு, ஜூன் 07

இலங்கையின் அனைத்து பொலிஸ் நிலையங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் வாகனங்களுக்காக பயன்படுத்தப்படும் எரிபொருள் அளவை 20 வீதத்தால் குறைக்குமாறு பொலிஸ் மா அதிபர் சீ.டீ.விக்ரமரத்ன சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறு பொலிஸ் மா அதிபரால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், தேவையற்ற மின்விளக்குகள், குளிரூட்டி இயந்திர பயன்பாட்டை நிறுத்துவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு சீர்குலைவது அதிர்ச்சியளிக்கிறது



## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 07

ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு சீர்குலைந்து வரும் அபாயகரமான நிலையைக் கண்டு அதிர்ச்சியடைகிறேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார்.

அவர் தனது டுவிட்டரில் இட்டுள்ள பதிவிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். குறித்த பதிவில் மேலும் தெரிவித்த அவர் –

‘எனது ஆட்சிக்காலத்தில் உங்களுடனான அந்த வரலாற்றுப் பிணைப்பை மேலும் வலுப்படுத்த முடிந்தது என்பதை மிகுந்த மரியாதையுடன் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

நமது ஆழமான வேரூன்றிய வரலாற்று உறவை அச்சுறுத்தும் தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் இன்று நான் மிகவும் வருத்தமடைந்துள்ளேன்.

உலகம் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பு மற்றும் வலுவான பிணைப்பு நாம் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க பெரும் உதவியாக இருக்கும் என்று நான் எப்போதும் நம்புகிறேன்’ என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் போரிஸ் ஜான்சன் வெற்றி

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் தனக்கு எதிரான நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார்.

2020 கொரோனா முதல் அலையில் விதிமுறைகளை மீறி மது விருந்தில் கலந்து கொண்டமை உள்ளிட்ட விவகாரங்களில் சிக்கிய போரிஸ் ஜான்சன் சொந்த கட்சி உறுப்பினர்களிடயே அதிருப்தியை சம்பாதித்தார்.

அவருக்கு எதிராக சொந்த கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்களே புகார் அளித்ததை அடுத்து நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் 211க்கு 148 என்ற வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பிரதமர் பதவியை போரிஸ் ஜான்சன் தக்கவைத்துக் கொண்டார்.





## நூற்றாண்டுகள் பழைமையான கப்பலில் தங்க நாணயங்கள் இருப்பது கண்டுபிடிப்பு

கொலம்பியாவில், நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த விபத்துக்குள்ளான கப்பலில் தங்க நாணயங்கள் இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொலம்பிய கடற்படை அதிகாரிகள், கடந்த 1708 ஆம் ஆண்டு கடலில் மூழ்கிய சான் ஜோஸ் கேலியன் கப்பலில் மேற்கொண்ட ஆய்வில், தங்கநாணயங்கள் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

தங்க நாணயங்கள், பீரங்கிகள் உள்ள காட்சிகள் வெளியாகியுள்ள நிலையில், கப்பலை மேலே கொண்டு வரும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

## ரூ.3.50 கோடி சம்பளம் 'வோர் அடிக்குது' என வேலையை ராஜினாமா செய்த இளைஞர்!



சீனாவைச் சேர்ந்த மைக்கேல் லின் என்பவர் கடந்த 2017ம் ஆண்டு முதல் நெட்பிளிக்ஸில் மூத்த சாப்ட்வேர் எஞ்சினியராக பணியாற்றி வந்தார். இவருக்கு இந்திய மதிப்பில் ரூ.3.50 கோடி ஆண்டு வருமானம். இவர் திடீரென தனது வேலையை ராஜினாமா செய்து விட்டார்.

இதுகுறித்து அவர் தனது லிங்கடின் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில் அவர் கூறியதாவது:-

“நெட்பிளிக்ஸ்நிறுவனத்தில்5ஆண்டுகள்பணியாற்றிய நிலையில் அந்த வேலையிலிருந்து விலகிவிட்டேன். இலவசமாக உணவு, அளவுக்கு அதிகமான ஊதியம், ஓய்வு நேரம், பெரிய நிறுவனம் என எனக்குக் கிடைத்தது. இருப்பினும் எனக்கு இந்த வேலை வோர் அடித்ததால் விலகிவிட்டேன்.

நான் வேலையிலிருந்து விலகப்போகிறேன் என்றவுடன் என் பெற்றோர், எனது வழிகாட்டியோர் எதிர்த்தனர். அடுத்த பணியை உறுதி செய்யாமல் வேலையிலி ருந்து ராஜினாமா செய்யாதீர்கள். அடுத்த வேலைக்கான ஊதியத்தை உறுதி செய்தபின் செல்லுங்கள் என்றனர். ஆனாலும் எனக்கு பிடிக்காததால் வேலையை விட்டுவிட்டேன் ஆரம்ப காலகட்டத்தில் நெட்பிளிக்ஸ் நிறுவனத்தில் நிறைய கற்றுக்கொண்டேன். இருப்பினும் சாப்ட்வேர் எஞ்சினியர் வேலை என்பது ஒரே மாதிரி வேலைகளை தொடர்ந்து செய்வதுதான்.

கொரோனாவுக்கு பின் ஊரடங்கில் உடன் பணிப்புரிபவர்களுடன் பழக வாய்ப்பில்லாமல் போனது. அதனால் வேலை அலுத்துவிட்டது ” இவ்வாறு மைக்கேல் லின் தெரிவித்துள்ளார். மைக்கேல் லின் நெட்பிளிக்ஸில் பணிப்புரிவதற்கு முன் அமேசானில் பணிபுரிந்து வந்தார்.



## தெற்கு சீனாவில் கொட்டித் தீர்த்த மழை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

தெற்கு சீனாவில் கொட்டித் தீர்த்த கனமழையால் வெள்ளக் காடாக காட்சி அளிக்கிறது.

குவாங்சி உள்ளிட்ட பகுதிகளில் கனமழை வெளுத்து வாங்கியது.

இதனை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு காரணமாக நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு குடியிருப்புகள், கட்டடங்கள் நீரில் தத்தளிக்கின்றன.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கிய பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோர் ரப்பர் படகு உள்ளிட்டவைகள் மூலம் மீட்கப்பட்டனர்.

## இம்ரான் கானை காயப்படுத்தினால் தற்கொலை தாக்குதல் நடத்துவேன்

### பாகிஸ்தான் அரசுக்கு மிரட்டல்



பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் அத்தாவுல்லா பிரதமர் பொஸ் அரசுக்கு மிரட்டல் விடுத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். பாகிஸ்தான் முன்னாள் பிரதமா இம்ரான் கானை கொல்ல சதி திட்டம் தீட்டப்பட்டதாக வதந்தி பரவியது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை கொல்ல சதி திட்டம் தீட்டப்பட்டதாக வதந்தி பரவியது. இதனையொட்டிபாதுகாப்புபலப்படுத்தப்பட்டுஉள்ளது.

இந்த நிலையில், இம்ரான் கானை காயப்படுத்தினால் தற்கொலை தாக்குதல் நடத்துவேன் என்று பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் அத்தாவுல்லா இப்போதைய பிரதமர் பொஸ் அரசுக்கு மிரட்டல் விடுத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு விசுவாசமான பாகிஸ்தான் தெஹ்ரீக் - இ - இன்சாப் (பிடிஐ) கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்தாவுல்லா டுவிட்டரில் கூறியுள்ளதாவது:

இம்ரான் கானின் தலையில் ஒரு முடி பாதிக்கப்பட்டால் கூட, நீங்களும் உங்கள் குழந்தைகளும் இருக்க மாட்டீர்கள் என நாட்டை வழிநடத்துபவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறேன். முதலில் நான் தான் உங்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்துவேன், உங்களை விடமாட்டேன். அதே போல, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தற்கொலைத் தாக்குதல் நடத்த தயாராக உள்ளனர் என்பதை வீடியோவாக பதிவிட்டு டுவிட்டரில் வெளியிட்டு அதிர்ச்சியை கிளப்பியுள்ளார்.

இதுகுறித்து இஸ்லாமாபாத் பொலிஸார் கூறுகையில்,

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாத்தில் ஏற்கனவே 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இம்ரான் கான், பானி காலா பகுதிக்கு வருவார் என கூறப்படுவதை அடுத்து அந்த பகுதியில் கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றனர். முன்னதாக, இம்ரான் கானுக்கு எதுவும் நடந்தால், அதற்கு ஆக்ரோஷமான பதிலடி கொடுக்கப்படும். அவர் மீது நடத்தப்படும் தாக்குதல் பாகிஸ்தான் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதப்படும். எனவே அதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என அவரின் உறவினரும், கட்சியைச் சோந்தவருமான ஹசன் நியாசி என்பவா தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.கவின் சர்ச்சைக் கருத்தால் உள்நாட்டில் பிளவுபட்ட இந்தியா தற்போது உலகளவில் பலவீனமாகுவதாக ராகுல்காந்தி விமர்சனம்

முகமது நபிகள் குறித்து பா.ஜ.கவின் செய்தித் தொடர்பாளர்கள் நுபுர் சர்மா மற்றும் நவீன் குமார் ஜிந்தால் இருவரும் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்கள், அரபு நாடுகளில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்த சர்ச்சைக்குரிய கருத்துகள் தொடர்பாக சவுதி அரேபியா, குவைத், கட்டார், ஈரான், எகிப்து மற்றும் ஓமன் ஆகிய நாடுகள் அதிகாரப்பூர்வமாக தங்களது எதிர்ப்பை அறிக்கைகள் மூலமாக வெளியிட்டிருந்தன.

அதையடுத்து, முகமது நபிகள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்த பா.ஜ.கவின் செய்தித் தொடர்பாளர்களான நுபுர் சர்மா மற்றும் நவீன் குமார் ஜிந்தால் ஆகிய இருவரையும் பதவி நீக்கம் செய்து பா.ஜ.க. உத்தரவு பிறப்பித்தது. இந்த விடயம் குறித்து காங்கிரஸ் எம்.பியான ராகுல்காந்தி தனது டுவிட்டர் பதிவில், உள்நாட்டில் பிளவுபட்ட இந்தியா, தற்போது உலகளவில் பலவீனமாகிறது. பா.ஜ.கவின் வெட்கக்கேடான மத வெறி நம்மைத் தனிமைப்படுத்தியது மட்டுமல்லாமல் உலகளவிலும் இந்தியாவின் நிலையைக் கெடுத்து விட்டது. - எனத் தெரிவித்துள்ளார்.





# கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கிறது பெங்களூருவில் முகக்கவசம் அணிவது கட்டாயம்

கர்நாடகத்தில் கொரோனா பாதிப்பு கடந்த சில தினங்களாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக தலைநகர் பெங்களூருவில் வைரஸ் பரவல் வேகம் எடுத்துள்ளது. பெங்களூருவில்தான் தினமும் அதிகமானோருக்கு பாதிப்பு உறுதி செய்யப்படுகிறது.

இந்த நிலையில், பெங்களூருவில் கொரோனா பரவலைத் தடுக்க பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பெங்களூரு மாநகராட்சி சிறப்பு அதிகாரியான ஹரீஷ் குமார் அளித்த பேட்டியில், பெங்களூருவில் கொரோனா பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் வணிக வளாகங்கள் உள்பட பொது இடங்களில் மக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் முகக்கவசம் அணிவது குறித்து அலுவலர்கள் மூலம் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம். பெங்களூருவில் தற்போது தினமும் பதினாறாயிரம் சோதனைகளை நடத்தி வருகிறோம். அதை இருபதாயிரமாக உயர்த்த முடிவு செய்துள்ளோம், என்று தெரிவித்திருக்கிறார்.

# ரூபாத்தாள்களில் காந்தியின் படம் மாற்றம்; இந்திய ரிசர்வ் வங்கி மறுப்பு வெளியிட்டது

இந்திய ரிசர்வ் வங்கி இனி புதிதாக அச்சிடவுள்ள ரூபாத் தாள்களிலும் ரவீந்திரநாத் தாகூர் மற்றும் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் ஆகியோரின் படங்களைப் பயன்படுத்துவது குறித்து பரிசீலனை செய்து வருவதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்திய ரிசர்வ் வங்கியின் அனைத்து மதிப்புள்ள ரூபாத் தாள்களிலும் இதுவரை மகாத்மா காந்தி அவர்களின் படம் இடம் பெற்றுள்ள நிலையில், ரிசர்வ் வங்கியினால் மகாத்மா காந்தி, ரவீந்திரநாத் தாகூர் மற்றும் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோரின்



உருவ மாதிரிகள் டெல்லி ஐ.ஐ.டி. பேராசிரியர் திலிப் டி ஹானிக்கு அனுப்பியுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது.

ஆயினும், ரூபாத் தாள்களில் உள்ள உருவங்களில் மாற்றம் செய்ய வாய்ப்பில்லை என இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், ரூபாத் தாள்களில் மகாத்மா காந்தியின் படத்திற்குப் பதிலாக மற்றவர்களின் படத்தை மாற்றவுள்ளதாக ரிசர்வ் வங்கி பரிசீலித்து வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. ரிசர்வ் வங்கியில் அத்தகைய திட்டம் எதுவும் இல்லை, என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

# தமிழக சொகுசுக் கப்பலுக்கு அனுமதியில்லை புதுச்சேரி ஆளுநர் தமிழிசை அறிவிப்பு

புதுச்சேரி என்.சி.சி. தலைமையகத்தின் சார்பில் என்.சி.சி மாணவ, மாணவிகளின் கடல் சாகச பயண நிகழ்வில் கலந்துகொண்ட மாநில ஆளுநர் தமிழிசை நிகழ்வை ஆரம்பித்து வைத்து, அவர்களை வாழ்த்தி உரையாற்றினார்.

அப்போது, தமிழகத்திலிருந்து சொகுசுக் கப்பல் புதுச்சேரிக்கு வருவது தொடர்பாக ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வியெழுப்பினர். அதற்குப் பதிலளித்த ஆளுநர் தமிழிசை, தமிழகத்திலிருந்து புதுவைக்கு வரும் சொகுசுக் கப்பலுக்கு புதுவை அரசு எந்த அனுமதியும் அளிக்கவில்லை. அதுதொடர்பான எந்தக் கோப்பும் என்னிடம் அனுமதிக்காக வரவில்லை.

சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும் என்பதே அரசின் எண்ணம். அதேநேரத்தில் வருமானம் வரும் என்பதற்காக இளைஞர்களையோ மக்களையோ பாதிக்கும் கலாசாரச் சீர்கேடான சுற்றுலாவுக்கு அனுமதி அளிக்க மாட்டோம், என்று தெரிவித்திருக்கிறார்.



# உயிர்க்கொல்லி ஒன்லைன் சூதாட்டங்களைத் தடைசெய்ய ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென எடப்பாடி கேள்வி

உயிர்க்கொல்லி ஒன்லைன் சூதாட்டங்களை தடை செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்? என தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை மணலி புது நகர் பகுதியை சேர்ந்த தகவல் தொழில்நுட்பத்துறை ஊழியரான இளம்பெண் பவானிக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவர் பொழுதுபோக்கிற்காக ஒன்லைனில் ரம்மி விளையாடி வந்த நிலையில் ரம்மி விளையாட்டுக்கு அடிமையாகி தனது 20 பவுண் நகையை விற்றதோடு, சகோதரியிடம் 30 லட்சம் ரூபா கடன் வாங்கியும் ரம்மி ஆடியுள்ளார். இதில் அவருக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பண இழப்பு காரணமாக மன உளைச்சலுக்கு ஆளான பவானி, வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் அ.தி.மு.க. எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பதிவிட்டிருக்கிறார். அந்தப் பதிவில், ஒன்லைன் ரம்மி விளையாட்டால் சென்னையில் ஓர் இளம்பெண் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ள நிலையில், தமிழகம் முழுவதும் அனைத்து பத்திரிகையிலும் இன்று முழு முதற்பக்க ஒன்லைன் ரம்மி விளம்பரம் வருகிறது. காவல்துறை டி.ஜி.பி.யே ஒன்லைன் ரம்மி அல்ல, அது ஒன்லைன் மோசடி, உங்கள் உயிரைக் கொல்லலாம், என வெளிப்படையாக எச்சரிக்கும் நிலையிலும் கூட, இந்த உயிர்க்கொல்லி ஒன்லைன் சூதாட்டங்களைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்காதது ஏன்? யாருடைய அழுத்தத்தால் இந்தத் தயக்கம்? இன்னும் எத்தனை உயிர்களை



தெரிந்தே கொல்லப்போகிறது இந்த ஒன்லைன் சூதாட்டம்?, என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கண்டல் தாவரங்களைப் பேணி சூழலைப் பாதுகாக்க அழைப்பு!

## திருமலையில் நடுகை நடவடிக்கை





(ஹஸ்பர்)

கண்டல் தாவரங்களைப் பேணிப் பாதுகாப்பதுடன் அவற்றைநட்டுப்பேணிவளர்ப்பதன்மூலம்சுற்றாடலுக்கும் மனிதன் மற்றும் உயிரினங்களின் இருப்புக்கும் பல பிரதிபலன்கள் பெற முடியும் என திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தெரிவித்தார்.

திருகோணமலை சாம்பல் தீவு களப்பு பிரதேசத்தில் கண்டல் தாவரங்கள் நடும் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

கண்டல் தாவரங்கள் சூழலைப் பாதுகாப்பவை. அதிகமான ஒட்சிசனை சூழலுக்கு வெளிவிடுகின்றன. இதனால் மனிதன் உட்பட உயிரினங்களின் வாழ்க்கை பாதுகாக்கப்படுகின்றது. கடலரிப்பு போன்ற விடயங்களைத் தடுக்கவும் கண்டல் தாவரங்கள் ஏதுவாக அமைகின்றன. எனவே அத்தாவரங்களை பேணிப்பாதுகாத்து சூழல் சமநிலைக்கு பங்கம் ஏற்படாதவாறு செயற்படல் அனைவரதும் பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது 500 கண்டல் தாவரங்கள் நடப்பட்டன.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல வளங்கள் முகாமைத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி. தனேஸ்வரன், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூல வளங்கள் முகாமைத்திணைக்களத்தின் பிரதேச பொறியியலாளர் எம். துளசிதாசன், திருகோணமலை நகரசபை செயலாளர், இலங்கை கடற்படை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## திருமலையில் வறிய குடும்பத்திற்காக அமைக்கப்படும் வீட்டுக்கு அடிக்கல்



(ஹஸ்பர்)

சுவிட்சர்லந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூக நலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் நிர்மாணிக்கப்படவுள்ள நான்காவது வீட்டிற்கான அடிக்கல் திருகோணமலை உதயபுரி பிரதேசத்தில் கடந்த வெள்ளியன்று காலை நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சரவணபவானந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதன், திருகோணமலை நகராட்சி மன்ற நூலகத்தின் பிரதம நூலகர் கனகசுந்தரம் வரதகுமார், அன்பு சனசமூக நிலையத்தின் செயலாளர் இராமநாதன் இராகுலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டு வீட்டிற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

இவ்வீடு அறப்பணி மையத்தின் நிறுவுனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் நேரடி கண்காணிப்பில், சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டத்தில் வசிக்கும் சுவிஸ் மன்ற சக்திகளான திரு.திருமதி ஸ்ரீதரன் சுயமதி குடும்பத்தினர் மற்றும் அவர்களது பிள்ளைகளின் நிதியனுசரணையில் நிர்மாணிக்கப்படவுள்ளது. வறிய குடும்பத்திற்காக நிர்மாணிக்கப்பட்டு நன் கொடையாக வழங்கப்படவுள்ள இந்த இல்லம் ஆதிபராசக்தி அறப்பணி மையத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் இந்த வரிசையில் நிர்மாணிக்கப்படவுள்ள நான்காவது வீடு என்பது குறிப்பிடத்தக்கது.

# றொட்டவெவ சந்தியில் விபத்து இராணுவச் சிப்பாய் படுகாயம்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – ஹொரவ்பொத்தானை பிரதான வீதி றொட்டவெவ சந்தியில் நேற்று முன்தினம் காலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரவ்பொத்தானையிலிருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் எத்தாபெந்திவெவ பகுதியிலிருந்து குறுக்கே வந்த வானொன்றுடன் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் மொரவெவ – மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த இராணுவ வீரரான அசேல லீலாரத்ன (23 வயது) படுகாயமடைந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் தொடர்புடைய வான் சாரதியைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனவும், படுகாயம் அடைந்த இராணுவ வீரர் மகாதேவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் விபத்து தொடர்பிலான விசாரணைகள் தொடர்கின்றன எனவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.



## கல்லடி ஆலய உற்சவம்

(கல்லடி நிருபர்)

கல்லடி வேலாயுதசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் நேற்று திங்கட்கிழமை வாஸ்து சாந்தி கிரியைகளுடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

நாள்களில் தினமும் இரவு வேளையில் உள்வீதி மற்றும் வெளிவீதி உலா வந்து முருகப்பெருமான் அடியவர்களுக்கு அருள் பாலிப்பார். எதிர்வரும் 14 ஆம் திகதி அதிகாலை தீமிதிப்பு வைபவம் இடம்பெறவுள்ளது.

உற்சவக் கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பாலசதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறுகின்றன.

## மண்முனை தென் எருவில்பற்றில் வீட்டுத்தோட்டங்களுக்கு ஊக்கம்




உலக சுற்றுச் சூழல் தினத்தினை முன்னிட்டு, 'பூலோகம் ஒரே ஒரு குடிமனை' எனும் தொனிப்பொருளில் எதிர்கால சந்ததியினரை ஊக்குவிக்கும் நோக்கில், வீட்டுத்தோட்டம் அமைக்கும் விழிப்புணர்வுகளுடன், வீட்டுத்தோட்டங்கள் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தினால், பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் இடம்பெற்றது.

கடந்த ஒரு வாரகாலமாக கொண்டாடப்பட்டு வந்த உலக சுற்றுச் சூழல் தினத்தையொட்டி, உணவுப் பாதுகாப்பு மற்றும் சிக்கனம் தொடர்பில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் கீழுள்ள 45 கிராம சேவகர் பிரிவுகளில் 225 விழிப்புணர்வு நிகழ்வுகள் மக்களிடத்தில் நடத்தி வைக்கப்பட்ட அதேவேளை, அப்பிரிவு மக்களுக்கு வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கான விதைகளும், மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டு வீட்டுத் தோட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

குறிப்பாக, கட்டடம் அமைந்துள்ள பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை ஆரம்பித்தல், பிரதேச செயலக பசுமைக்கழக உறுப்பினர்களால் வருடாந்தம் வெளியிடப்படும் சுற்றாடல் செய்திமடல் வெளியீடு, உணவுப் பாதுகாப்பு மற்றும் சிக்கனம் தொடர்பில் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள், வீட்டுத்தோட்டம் செய்வதற்கான மரக்கன்றுகள் மற்றும் விதைகள் போன்றவை பொது மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், பசுமைக் கழக உறுப்பினர்கள், கிராம சேவனர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டு. அமைப்பாளர் நியமனம்

ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளராக முன்னாள் அதிபரான பிரான்சிஸ் மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் முகாமைத்துவ குழுவின் பரிந்துரையின் பேரில் கட்சியின் செயற்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இவருக்கான நியமனக்கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவரும், கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் மத்தும பண்டார உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்காக இவர் செயற்பட்டவர் என்பதும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இவர் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள், எரிவாயுக்கு ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சிய டைந்துள்ள நிலையில், எதிர்வரும் மாதங்களில் உணவு நெருக்கடி நிலைமைகள் ஏற்படக் கூடும் என்றும், இந்த நிலைமையைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார் எனவும் அவர் கூறியுள்ளார்.

பிரதமரின் உரை முழுமையாக வருமாறு:-

நாமும் நம் நாடும் எதிர்கொள்ளும் நிலைமையை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகின்றேன். இந்த நிலையில் இருந்து நாட்டை உயர்த்த பாரம்பரிய வழிகளில் இருந்து புதியவழிகளை கண்டுபிடிக்க வேண்டும்.

பாரம்பரிய அரசியல் சித்தாந்தங்களை குறுகிய காலத்துக்கு ஒதுக்கி வைத்து-விட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சியில் முழு நாட்டு மக்களும் பங்குதாரர்களாக இருக்க வேண்டும். நாட்டிற்காக நாம் அனைவரும் ஆற்ற வேண்டிய பங்கு உள்ளது.

இங்கு எங்களது முதன்மையான கவனம் பொருளாதார ஸ்திரத்தன்மையில் உள்ளது. ஆனால், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் மட்டும் நாம் இந்நிலையிலிருந்து மீள முடியாது. நம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டும்.

இது இரண்டு மூன்று நாட்களில் செய்து முடிக்கும் காரியம் அல்ல. இந்தச் சவாலை அற்புதங்களால் செய்திட முடியாது. கோஷங்களிலிருந்து அல்ல. மந்திரத்தால் அல்ல. உணர்ச்சிகளால் அல்ல. புத்திசாலித்தனமாக சிந்திக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு அவசியம்.

ஒரு மாதத்துக்கு 500 மில்லியன் டொலர்களை எரிபொருளுக்காக நாடு செலவிடுகின்றது. தற்போதைய நெருக்கடியால் எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்த ஆண்டு இறுதிக்குள் உலக மசகு எண்ணெய் விலை 40% வரை உயரும் என்று சிலர் மதிப்பிட்டுள்ளனர்.

இந்த பின்னணியில் எரிபொருளுக்கான கூப்பன் முறையை அறிமுகப்படுத்தும் யோசனையை நிராகரிக்க முடியாது. எப்படியாவது அடுத்த ஆறு மாதங்களுக்கு 3 ஆயிரத்து 300 மில்லியன் டொலர் எரிபொருளைத் தேடிக்கொள்ள வேண்டும்.

